# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.6 பரிசுத்த திரியேக தேவன்

**வேத வசனம்:** **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

*மத்தேயு 28:19*

**அறிக்கை:** **தேவன் தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் தூய ஆவியானவரை நமக்குக் கொடுத்தார்**



**சத்தியம்:** தேவன் திரித்துவமானவர். பிதாவாகிய தேவன் தமது குமாரனாகிய இயேசுவை நம்மை மீட்டுக்கொள்ளுவதற்காக அனுப்பினார். அவருடைய பரிசுத்த ஆவியானவர் நம்மைத் தேற்றுவதற்காகவும் உதவி செய்வதற்காகவும் கொடுக்கப்பட்டவர்.

## வேத பகுதி: மத்தேயு 3:13-17

**பாடம்**

**1. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாழுகிறார்:** தேவன், பிதா - குமாரன் - தூய ஆவி என்ற மூன்று ஆள்தத்துவம் கொண்ட “திரியேகமானவர்” என்று வேதபுத்தகம் சொல்லுகிறது. “இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்”.

**2. பரலோக பிதா, பரிசுத்த மைந்தன், பரிசுத்த ஆவியானவர்:** எடுத்துக்காட்டுடன் விவரிக்க: பனிக்கட்டி உருகும்போது அது திரவ நிலையில் இருக்கும். கொதிக்க வைக்கும்போது வாயு நிலைக்குச் செல்லும். ஆனாலும் அது தன்னுடைய இயல்பான நிலையை இழக்காது. அதுபோல பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து மற்றும் தூய ஆவியானவர் ஆகிய மூவரும் மூன்று நிலைகளில் உள்ள ஒரே கடவுள். மூவரும் ஒருவருக்கொருவர் சம நிலையும் சம மகிமையும் உடையவர்கள். (பிலிப்பியர் 2:5,6)

**3. சமமான நிலையும் தன்மையும்:** பரலோக பிதா உலகில் உள்ள அனைத்தையும், அனைத்து உயிர்களையும் படைத்தவர். அவரே நம்முடைய ஜெபங்களை பரலோகத்தில் இருந்தபடியே கருத்தாகக் கேட்பவர். தேவன் மிகப்பெரியவரும் சிறப்பானவராகவும் இருக்கிறார். ஆனாலும் அவர் அன்பானவர். பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் கோராகு என்பவரும் அவருடைய கூட்டாளிகளும் தேவனுடைய தலைவர்களை அவமானப்படுத்திய தால் பூமி பிளந்து அவர்களை விழுங்கும்படி தேவன் செய்தார். மனிதரை மீட்டுக்கொள்ளும் இரட்சகராக மனுஉரு எடுத்து உலகத்திற்கு வந்த தேவனாகிய பிதாவே அவருடைய பரிசுத்த குமாரன் எனப்படுகிறார். அவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபின், பரலோகம் சென்று, தேவனாகிய பிதாவின் வலதுபாரீசத்தில் அமர்ந்து கொண்டு மனிதருக்காக பரிந்து பேசி வருகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் சீஷர்களை வல்லமையால் நிரப்பி, பெலப்படுத்தி வருகிற தேவனே தூய ஆவியாகிய தேவன் என்பவர். (எண். 16:31-33, ரோமர் 8:34)

**4. திரித்துவ தேவன்:** தேவன் சொன்னார், “நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.... அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்”. “பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்”. இயேசுவானவரை தேவன் என்று விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்குள்ளும் ஆவியாகிய தேவன் வந்து தங்குவார்.

**முடிவுரை:** மதுபானத்தினால் நிரம்பியிராமல் தூய ஆவியினால் நிரம்பியிருக்கும்படி வேதம் போதிக்கிறது. நாம் தினமும் தேவ ஆவியினால் நிரப்பப்படவும் அவராலே நடத்தப்படவும் தேவனிடம் கேட்க வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.